படகு வாங்குவதற்குத் திட்டம் எப்போது தயாரிக்கப்பட்டது?

(இ) படகு எப்போது வாங்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ரூ. 75,000 செலவில் மீன்பிடி படகு ஒன்றை வாங்க 1956-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப் பட்டபோது இதன் செலவு சுமார் ரூ. 1 லட்சமாகியது. இந்த அதிக அளவுச் செலவின் காரணமாக மீன்பிடி படகு வாங்க வேண்டாம் என முடிவு செய்யப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தப் பயிற்சியின் முக்கியத்துவம் கருதியாவது இனியாவது இந்தப் படகு வாங்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் படகை வாங்கி வைத்துப் பயிற்சி அளிக்கலாம் என்ற எண்ணத்தின்மீதுதான் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது Chairman, Madras Port Trust மீன்துறை இயக்குநர் ஆகியோரின் ஒப்பந்தத்தின் அடிப்படையில், பயிற்சி பெறப் படகுகள் கிடைக் கின்றன. ஆகவே, தனியாக வாங்க வேண்டியது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

Full time course in Commercial Practice

* 135 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the duration of the full time Diploma course in Commercial Practice conducted by the Institute of Commercial Practice has been increased?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வாணிபப் பயிற்சி முழுநேரத் தகுதிப்பட்டயப் படிப்பின் பயிற்சிக் கால அளவு இரண்டாண்டினின்று மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வாணிபப் பயிற்சியில் முழுநேரத் தகுதிப்பட்டயப் படிப்பில் தேர்ச்சிபெற்ற அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்பட்டிருக் கிறதா? அப்படியில்லையென்றால், வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்? அரசாங்கத்திலே வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களில் எவ்வளவு பேர் கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு வேலை கிடைக்கிறதோ அந்த அளவுக்கு

மாணவர்கள் அதிலே சேர்க்கப்படுகிறார்கள். அதையொட்டி கொடுக்கப்படும் அந்தப் பயிற்சிக்குப் போதுமான காலம் இல்லாமல் இருப்பதாகக் கருதியதால் இரண்டாண்டுகளாக இருந்ததை மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

Southern Regional Committee of the All-India Council of Technical Education.

நிபுணர் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு மூன்றாண்டுகளாக்கப் பட்டு இருக்கிறது. எவ்வளவு பேர் வேலையில்லாமல் இருக்கிறார் கள், தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்களா என்ற குறிப்பு இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்தப் பட்டயப் படிப்புப் படிக்கின்றவர்கள் படிக்கின்ற சப்ஜெக்டுகள் தவிர வேறு ஏதாவது மொழி அங்கு படிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறதா? அப்படிப் பட்ட மொழியின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

புதிய கல்லூரிகள் திறப்பு

*136 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-ல் தமிழகத்தில் புதிய கல்லூரிகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்திருக்கிறதா?

(இ) ஆம் என்றால், எத்தனை கல்லூரிகள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1969-70-ம் ஆண்டில் அரசு ஆறு கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்த ஆறு கல்லூரிகளிலே பெண் களுக்கு என்று எத்தனை கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறது? இந்திய மாதர் சங்கம், பெண்களுக்காக உள்ள கல்லூரிகள் போதாது, நாங்கள் ஆண்களோடு சேர்ந்து படிப்பது அவ்வளவு சரியாக இருக் காது என்று சொல்லியிருக்கிறதே அதுபற்றி அரசாங்கம் செய்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 6 கல்லூரிகளிலே பெண்களுக்காக 3 கல்லூரிகளும், ஆண்களுக்காக 3 கல்லூரிகளும்; ஆக 6 கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறது. திண்டி வனத்தில் ஆண்கள் கல்லூரி ஒன்றும், நாமக்கல்லிலே பெண்கள் கல்லூரி ஒன்றும், நந்தனத்தில் ஆண்கள் கல்லூரி ஒன்றும். மேலூரிலே ஆண்கள் கல்லூரி ஒன்றும், புதுக்கோட்டையிலே பெண்கள் கல்லூரி ஒன்றும், முசிறியில் பெண்கள் கல்லூரி ஒன்றும் ஆக இப்படி ஆண்களுக்கு 3 கல்லூரிகள், பெண்களுக்கு 3 கல்லூரி கள் ஆரம்பித்திருக்கிறது. எந்த அளவுக்குத் தகுதியும், தேவை யும் இருக்கிறதோ அதைக் கருதி நிறைவேற்றப்பட்டு வருகிறது.